# வீதி நாடகம் சமூக மாற்றத்திற்கான அரங்கு

**முனைவர்.எல்.ராம்ராஜ்**

**உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறை,**

**பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி,**

**கோயம்புத்தூர் 14. drlramraj@gmail.com**

17

**“அரங்கத்தின் தோற்றம் இயற்கை மற்றும் பிற மனிதர்களுடன் நடத்தும் போராட்டங்களுடன் தொடர்புடையது ;**

**“அரங்கம் என்பது கட்டடம் அல்ல. மக்கள்”**

**- கூகி வா தியாங்கோ**

**ஆய்வுச்சுருக்கம்**

வீதி நாடகங்கள் மக்கள் இயங்கும் பொதுவெளியில் நிகழ்த்தப்படுவது . மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை நாடகமாக்குவது . மக்கள் இருக்கும் இடத்திற்கேச் சென்று நிகழ்த்தப்படுவது. இத்தகைய வீதி நாடகங்கள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்டோர் வலிகளைப் பேசுவன மற்றும் விழிப்புணர்வு நோக்கிலும் நிகழ்த்தப்படுவன. தமிழ் மரபின் தெருக்கூத்து வடிவம் வீதியில்தான் நிகழ்த்தப்படுகிறது எனினும் அதன் பேசுபொருள் புராணக் கதைகள் சார்ந்தது . நவீன மரபிலான வீதி நாடகங்கள் அதிகார வர்க்கங்களின் ஒடுக்குமுறைகளை மக்களுக்குச் கொண்டு செல்வன. மக்களிடையே முதலாளியியம், கார்ப்பரேட்டுகளிடம் அடமானமாகிவிட்ட அரசுகள் , சாதீயம் என்பன போன்ற பல விதமான பிரச்சினைகளையே பேசுபொருளாகக் கொண்டவை . மக்கள் பிரச்சினைகளை அவர்களிடமே நிகழ்த்துதல் மூலம் பேசி விவாதத்தை ஏற்படுத்துவன. அந்த வகைகளில் அவை சமூக மாற்றத்திற்கான அரங்குகள் ஆகின்றன.

நாடகம் என்பதே சமூக மாற்றத்திற்கான கலை வடிவம்தான். வீதி நாடகங்கள் நேரடியாக மக்களைச் சந்தித்து மக்கள் மொழியில் பேசுகின்ற அளவில் அவை சமூக மாற்றத்தில் முக்கியப்பங்கு வகிப்பவையாக இருக்கின்றன. தொழில்நுட்பமும் கார்ப்பரேட் வணிகமும் மனிதர்களின் பண்பாட்டு அடையாளங்களை இழக்கச் செய்திருபதுடன் சமூக அவலங்களுக்கு எதிர்வினையாற்றாத உணர்வற்றவர்களாகவும் மாற்றி இருக்கிறது . இத்தருணத்தில் நாடகத்தின் எதிர்வினை என்னவாக இருக்க வேண்டும் ? அப்படி இருக்கிறதா ? இல்லையா ? காரண காரியங்களை விவாதிக்க முயற்சிக்கிறது இக்கட்டுரை . வீதி நாடகங்களின் வடிவம், உள்ளடக்கம் உலக மக்கள் மத்தியில் வீதி நாடகம் நிகழ்த்திய வரலாறுகள் ஆகியவற்றைக் கூறிச் சமகாலத்தில் வீதி நாடகங்கள் நிகழ்த்தப்படுவதற்கு ஏற்பட்டிருக்கிறச் சிக்கல்களையும் வெளிப்படுத்தும் நோக்கம் கொண்டதாக அமைகிறது .

**திறவுச் சொற்கள்**

**மூன்றாம் அரங்கம் –** வீதி நாடகங்கள் , **கண்ணுக்குப் புலப்படா அரங்கம் –** வீதி நாடக அரங்கின் ஒரு வகைமை, **அடையாள மீட்பு –** பண்பாட்டு அடையாள மீட்டெடுப்பு , **கட்டவிழ்ப்பு –**சொற்களுக்கான அர்த்தங்களை மறுவாசிப்பின் மூலம் மாற்றுதல் , **ப்ரோசீனியம் அரங்கு –** மேடை நாடக அரங்கு .

**அறிமுகம்**

அரங்கு ஒரு பண்பாட்டு வெளி. அரங்கில் மக்கள் ஒன்றுகூடி இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள இயலும். சடங்குசார் நிகழ்வுகளை அரங்கின் தன்மையோடு அணுக இயலும் . சடங்குத் தன்மை நீங்கிய ஐரோப்பிய அரங்க முறைமை நிலைபெற்றுவிட்ட தருணத்திலும் மக்கள் ஒன்றுகூடுதல் தம் அரசியல் சமூக நிலை குறித்து பகிர்தல் சாத்தியப்பாடுகள் மிக்கதாகத்தான் அரங்கச் சூழல் வடிவம் பெறுகிறது. அந்தச் சூழலே சமூக மாற்றத்திற்குக் காரணியாக அமையும். 'அரங்கம்' எனும் சொல் நாடகத்தை மட்டுமல்லாது ஆட்டக்கலைகள், நாட்டார் கூத்து மரபுகள் , ஐரோப்பிய பாணியிலான இசை நிகழ்வுகள் என நிகழ்த்துக்கலைகள் பலவற்றையும் குறிக்கும். அவை நிகழ்த்தப்படும் வெளி , நோக்கம், பேசுபொருள் ஆகியன பொருத்து அவற்றின் அடையாளம் அறிந்துகொள்ளப்படும். புராணக் கதைகளை அல்லது மண்சார் தொன்மக் கதைகளை நிகழ்த்திவந்த நாடக அரங்க மரபு காலனிய அடிமைக் காலத்தின்பொழுது ஆதிக்கத்திற்கெதிரான எதிர்க்குரல் கொடுப்பதாக மாறியது . அக்குரல் விடுதலைக்குப் பிறகும் அரசதிகாரத்தின் மக்கள்விரோத செயல்பாடுகளைக் கண்டித்து நிகழ்த்தப்படுவதாக மாறியது. காலனியம் தந்துசென்ற கல்வி எல்லோருக்குமானதாக இருந்ததுவும் பின் நவீனத்துவம் , பின்னைக் காலனியச் சிந்தனைகள் போன்றவைகளின் வளர்ச்சியும் அரசதிகார ஆதிக்கம் மட்டுமின்றி இந்தியச் சமூகப் படி நிலை அமைப்புகளுக்குக் காரணமான கட்டமைப்பு முறைகளையும் கேள்விக்குட்படுத்தும் அறிவார்ந்த பேசுபொருள்கள் நாடகத்திற்குள் இடம்பெற்றன.

இடதுசாரிகள் தெருவில் இறங்கித் தொழிலாளர் உரிமைகள் அரசாதிக்க நடைமுறைகள் ஆகியனவற்றுக்காகப் போராடியபொழுது போராட்ட வழிமுறைகளில் ஒன்றாக வீதி நாடகம் மாறியது. அவற்றின் பேசுபொருளை மாதிரியாக எடுத்துக் கொண்டு திராவிட இயக்க நாடகங்கள் மேடை நாடகங்களில் கலகக் குரல் எழுப்பின என்று கருத இடமுண்டு. இவ்வகைகளில் நாடகச் செயல்பாடுகள் மக்களுக்கான கலை வடிவங்களாக மாறின. அவற்றில் முக்கியமானவை மூன்றாம் அரங்கம் என அறியப்படுகின்ற வீதி நாடகங்கள் .1970 களின் தொடக்கத்தில் இருந்து 2000 ஆம் வரை தமிழ்ச்சூழலில் சுறுசுறுப்போடு இயங்கி வந்தது. 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகுத் தொய்வடைந்ததும் கொரான ஊரடங்கிற்குப் பிறகு சொல்லிக்கொள்ளும் அளவில் வீதி நாடகங்கள் நிகழ்த்தப்படாமல் இருப்பதற்கானக் காரண காரியங்களை ஆராய்வது அவசியமாகிறது. ஊரடங்கு சமூக இடைவெளியை உருவாக்கியதுடன் கலை இலக்கியங்களையும் தொழில் நுட்பக் காட்சிஊடகங்களுக்காக அடைத்துவிட்டதா? அது மட்டுமே காரணமா? அரசியல் பொருளாதாரக் காரணிகள் இல்லையா? என்பன போன்ற வினாக்களுக்கான விவாதங்களை எழுப்புவது அரங்கச் செயல்பாடுகளை முன்னெடுக்கும் சூழல்களை உருவாக்கித் தரும்.

**வீதி நாடக வடிவமும் பேசுபொருளும்**

வீதி நாடகங்களை நிகழ்த்துவதில் சிக்கல்களும் தேவைகளும் என்கிற பகுப்பினை உடையது . குறிப்பிட்ட சில ஆளுமைகளின் செயல்பாடுகளை முன்வைத்து சமூக மாற்றச் செயல்பாடுகள் விவாதிக்கப்படுகின்றன. வீதி நாடகங்கள் எவ்வாறு சமூக மாற்றத்திற்கு உதவுகின்றன அவற்றை நிகழ்த்துவதில் உள்ள சமகாலச் சிக்கல்கள் என்ன என்பனவற்றை வெளிக்கொணரும் நோக்கங்களைக் கொண்டது இக்கட்டுரை .

**வீதி நாடகம் வடிவமும் பேசுபொருளும்**

வீதி நாடகம் என்னும் சொல் Street play என்கிற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும் . வீதியில் நிகழ்த்தப்படுவது என்னும் பொருளில் கையாளப்படுகிறதெனின் நாட்டார் தெருக்கூத்து அரங்கச் செயல்பாடும் வீதியில்தான் நிகழ்த்தப்படுகிறது . தெருவில் நிகழ்த்தப்படும் கூத்து. ஆனால் தமிழ் நிகழ்த்துமரபில் நாடகம் எனும் கலை வடிவம் 'கூத்து' எனும் சொல்லால் வழங்கப்பட்டுள்ளது . சேலம் மாவட்ட கிராமப்புறங்களில் தெருக்கூத்தினை நாடகம் என்றும் கூத்து என்றும் இரண்டு சொற்களாலும் அழைக்கின்றனர் . நாடகம் எனும் சொல்லானது ' நாட்டக்' எனும் சமஸ்கிருதச் சொல்லில் இருந்து வந்தேறியதாக இருக்கலாம். தொல்காப்பியரின் ' உலக வழக்கினும் நாடக வழக்கினும் ' என்னும் நூற்பாவின் அடிப்படையில் பெரும் சொல்லாய்விற்கு உட்படுத்தும் ஆய்வு இதுவல்ல என்பதால் சொல் விளக்கம் பின்வருமாறு முடிக்கப்படுகிறது. ' நாட்டார் தெருக்கூத்து அல்லாத வீதி நாடகம் என அழைக்கப்படும் நாடகமானது 1970 களுக்குப் பின்னால் உருவான வீதிகளில் நிகழ்த்தப்படுகிற நாடக வடிவத்தைக் குறிப்பதாகும்.

வீதி நாடகங்களை எளிய நாடகம் (POOR THEATRE ), மக்கள் நாடகம் (PEOPLE'S THEATRE) எனப் பல பெயர்களில் அழைப்பர் . காரணம் இவ்வகை நாடகத் தயாரிப்பிற்குத் தயாரிப்புச் செலவு மிகக்குறைவாக இருப்பதும் எளிய மக்களின் பிரச்சினைகளையே பேசுபொருளாகக் கொண்டிருப்பதுமேயாகும். வீதி நாடகத்தில் உடலே பிரதானம். உடல்மொழியை அதிகம் கோருபவை. உடலைக்கொண்டே மக்கள் பயன்படுத்தும் பொருட்களை இயங்கு வெளிகளை உருவாக்கக் கூடியவை.

“பாரம்பரிய தெருக்கூத்தும் இல்லாத,பார்சி தாக்கத்துடன் கூடிய , மேலை நாட்டு பெட்டிவடிவ நாடகங்களும் அல்லாத, இந்த மூன்றாவது வகையிலான நாடகத்தில் , புகழ் இல்லை. அதை நோக்கி இதை நாடாதீர்கள் . கதாநாயகன், அந்த போதை இல்லை. பணம் இல்லை. இல்லை.” **(எஸ்.சாமினாதன். 2023)**

இக்கூற்றில் வீதி நாடகங்கள் யாருக்கானவை என்பதை உணர்ந்துகொள்ள இயலும் . சினிமா நுழைவிற்கான ஆட்களைத் தயாரிக்கிற நாடக வடிவமும் அல்ல. சமகாலத்தில் நாடகப் பயிற்சி சினிமாவிற்குள் நுழைவதற்கான பயிற்சிக்காக மட்டுமே என்கிற நிலை உருவாகியிருப்பது நாடகத்திற்கு வந்த போதாத காலம்தான்.

பொதுவாக அரங்கச் செயல்பாடுகளை மூன்று வகைகளாகப் பகுப்பர்

1. முதல் அரங்கம் – மரபுக் அரங்கக் கலைகள்
2. இரண்டாம் அரங்கம் – மேடை அரங்கக் கலைகள்
3. மூன்றாம் அரங்கம் – தெருவில் நிகழ்த்தப்படும் அரங்கக் கலைகள்

மூன்றாம் வகையில்தான் வீதி நாடகங்கள் இடம்பெறும். முதலிரண்டு அரங்கங்களும் மக்களை நிகழ்த்தும் இடத்திற்கு அழைக்கும். வீதி நாடகம் மக்கள் புழங்கும் இடத்திற்குச் செல்லும் . கிடைக்கிற இடத்தையே மேடையாக்கிக் கொள்ளும். குறைந்த ஒப்பனை , இருக்கிற பொருட்களைக் கொண்டு

நிகழ்த்தப் படுதல் ஆகியன வீதி நாடகத்தின் எளிமையைக் காட்டும்.

வீதி நாடகத்தின் பேசுபொருள்

புராணங்களும் தொன்மங்களும் நிகழ்த்துப்பிரதியாக்கப்பட்டு நடிக்கப்படுவது மரபுக் கூத்திலும் , இசை நாடக மரபிலும் இருப்பது . காலனிய காலத்திற்குப் பிறகான சிந்தனை வளர்ச்சியினூடாக நாடகத்தில் உருவான மாற்றம் நிகழ்காலச் சம்பவங்களைக் கதையாக்குவது உருவானது. அதிலும் வீதி நாடகங்கள் அதிகார வர்க்கத்தின் மனிதம் , சட்டம் மீறிய நடவடிக்கைகளைக் கதைப்பொருளாகக் கொண்டவை . வீதி நாடகங்களின் பேசுபொருளை இருவகைகளாகப் பகுக்க முடியும் .

- சமூகப் பொருளாதார அரசியல் சார்ந்தப் பிரதிகள்
- விழிப்புணர்வூட்டல் சார்ந்தப் பிரதிகள்

இப்பாகுபாட்டில் உருவாக்கப்படும் கதைகள் பிரதிகள் அவ்வப்போதைய நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டு அமையும்.

**சமூகப் பொருளாதார அரசியல் சார்ந்த பிரதிகள்**

எளியவர்களின் உரிமைகளை மீட்கும் பொருட்டும் ஒடுக்கப்பட்டோர் சுய மரியாதையும் சமத்துவமும் வேண்டியும் உருவாக்கப்படும் கதைப்பிரதிகள் சமூகப் பொருளாதாரம் சார்ந்தவைஆகும். வர்க்கப் போராட்டம் , அரசதிகார அத்துமீறல் எதிர்ப்பு , சாதீயக் கொடுமைகள் , நிலவுடைமைச் சமூக எதிர்ப்பு சனாதன எதிர்ப்பு ஆகியனவற்றைப் பேசுபொருளாகக் கொண்டவை. வீதி நாடகமாக நிகழ்த்தப்பட்ட இப்பொருண்மை சார்ந்த சில நாடகங்கள் சான்றுகளாகத் தரப்படுகின்றன.

பெல்ச்சி – சமுதாயா கலைக்குழுவினர் பெங்களூரு – பீகார் சுரங்க விபத்தை அடிப்படையாகக் கொண்டது

பயணம் – சென்னைக் கலைக்குழு- புலம்பெயரும் உழைப்பாளர்கள் பற்றியது

ஒரு புல்லாங்குழல் அடுப்பூதுகிறது – பரட்டை என்கிற அப்பாவு இயக்கியது – ஒடுக்கப்பட்ட பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும் என்பதைப் பற்றியது

வயிறு – ஆர்.எஸ்.சேகர் – உழைக்கும் மக்களின் போராட்டம்

நியாயங்கள் – இயக்கம் பேராசிரியர் மு.ராமசாமி

இவையாவும் 1970 – 1980 களில் நிகழ்த்தப்பட்டவை . அப்போதும் அதன்பிறகும் பல நாடகங்கள் உருவாக்கப்பட்டன எனினும் சில சான்றுகள் மட்டும் இங்குத் தரப்படுகின்றன. சமீபத்தியச் சான்றுகள் பலவுள்ளன. மேலும் வீதி , பரீக்ஷா, கூத்துப்பட்டறை, நிஜ நாடக இயக்கம், பல்கலை அரங்கம்,என்று பல அரங்கக் குழுக்களின் நாடகங்களும் உள்ளன.

மேற்கூ றிய வீதி நாடகங்களின் பொருண்மைகள் அடித்தட்டு மற்றும் உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டவை. எளிய மக்கள் மத்தியில் நிகழ்த்தப்பட்டு அவர்களின் நிலைக்கானக் காரணம் பார்வையாளர்களாகிய எளிய மக்களால் விவாதிக்கப்பட்டவை. இந்தச் சாத்தியப்பாடு வீதி நாடகத்தில் மட்டுமே உள்ளது. மக்களின் உரிமைகளைப்பெறுதலும் இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்தலும் வீதி நாடகங்களின் நோக்கங்கள் ஆகின்றன. அவ்வையில் சமூக அரசியல் பொருளாதார பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்ட

ISSN:2582-9599



நாடகங்கள் மாற்று சமுதாயத்தை முன்னிருத்த முயல்வனவாக உள்ளன.

**விழிப்புணர்வூட்டல் சார்ந்தப் பிரதிகள்**

வீதி நாடகங்கள் தனிப்பட்ட குழுக்கள் மட்டுமின்றி அரசாங்கத் துறைகளாலும் அரசு உதவிபெறும் அமைப்புகள் மற்றும் அரசு சாரா சமூகச் செயல்பாட்டு அமைப்புகளாலும் நிகழ்த்தப்படுகின்றன. கல்வி நிலையங்களுக்குள்ளும் புறமும் மாணவர்களைக்கொண்டு நிகழ்த்தப்படுகிற வீதி நாடகங்களும் மேலதிகமாக உள்ளன. இத்தகைய அமைப்புகளால் நிகழ்த்தப்படுகின்றன நாடகங்களின் பேசுபொருள் விழிப்புணர்வு சார்ந்தவை. சூழல் பாதுகாப்பு , வாக்குரிமை , தேசப்பற்று , கையூட்டு , சாலைப்பாதுகாப்பு, நோய்த்தடுப்பு முதலியவற்றுக்கான விழிப்புணர்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்பவையாக இருக்கும். பொதுமக்கள் கூடுமிடங்களில் நிகழ்த்தப்படும் இந்த நாடகங்களும் சமூக மாற்றம் வேண்டி நிகழ்த்தப்படுபவைதான்

**. வீதி நாடகத்தில் நிகழ்த்துநர் – பார்வையாளர் உறவுகள்**

நிகழ்த்துக் கலைகளில் நிகழ்த்துநர் பார்வையாளர் உறவு முக்கியமானது. பார்வையாளர் வெறும் பார்ப்பவராக மட்டும் இருக்கிறாரா? இல்லை நிகழ்த்துதலில் பங்குபெறுகிறாரா? பார்வையாளர் எந்த அளவில் ஈடுபடுகிறார் என்பதைப் பொருத்து நிகழ்த்துதல் பார்வையாளரை அடையும் அடர்த்தி இருக்கும். சடங்குகள் சடங்காடியுடன் பார்வையாளரை உட்படுத்தித்தான் நிகழ்த்தப்படும். நாட்டார் நிகழ்த்துக்கலைகளும் சடங்கு சார்ந்தவை என்பதால் பார்வையாளர் இடையீடின்றி நிகழ்த்தப்படுதல் இல்லை. ஆனால் மேடை நாடகங்களில் பார்வையாளர் ஒரு சில இடங்களைத் தவிர்த்துப் பார்ப்பவராக மட்டுமே இருப்பார். அவருக்குள் நிகழும் நாடகம் சார்ந்து என்னவிதமான உணர்வுகள் இருந்தாலும் தனக்குள் உணர்ந்துகொள்ளத்தான் முடியும். நிகழ்த்துதல் முடிந்த பிறகு உரையாட முடியும். ஆனால் வீதி நாடகங்களில் பார்வையாளர் உறவென்பது நாட்டார் சடங்குகள் போல பார்வையாளர் இடையீடுடன் நடைபெறும். வீதி நாடக பார்வையாளருறவினைப் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

- நடிகர் உடன் நடிக்கும் நடிகரிடம்
- நடிகர் பார்வையாளரிடம்
- பார்வையாளர் நடிகரிடம்
- பார்வையாளர் பார்வையாளரிடம்

மேற்கூறப்பட்ட எல்லா வகைகளிளும் வீதி நாடக உரையாடல் நடைபெறும். முதலிரண்டு மேடை நாடகத்திற்கானது . அடுத்த இரண்டு மேடை நாடகங்களில் இருக்காது. இறுதியான பார்வையாளர் பார்வையாளரிடம் நாடகப் பொருண்மை சார்ந்த விவாதம் என்பது மூன்றாம் அரங்கத்திற்கேயுரிய தனிச்சிறப்பாகும் . ஜெர்மன் நாடக ஆளுமை பெர்ட்டோல்ட் பிரெக்ட்(1898-1956) ,

“ கலை பார்வையாளனை உணர்வெழுச்சியூட்டி தன்னிலை மறக்கச் செய்யக் கூடாது . கலை பார்வையாளனைச் சிந்திக்கச் செய்து அறிவார்ந்த விவாதத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும் “

என்பார். இதனைக் காவியபாணி அரங்கு/ நிகழ்காவிய அரங்கு என்பர். பார்வையாளனைச் சிந்திக்கச் செய்யும் முறைமையானது வீதி நாடகத்திலேயே சாத்தியமாகும். இந்தச் சிந்திக்க ச் செய்யும் முறைமையே சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

**வீதி நாடகங்களை நிகழ்த்துவதில் சிக்கல்களும் தேவைகளும்**

காலனிய காலத்தின் , நாடகங்கள் நிகழ்த்தப்படும் முன் காவல் நிலையத்தில் பிரதியைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பிறகே நிகழ்த்த முடியும் என்கிறச் சட்டம் விடுதலைக்குப் பிறகும் நீடித்தது என்பர். தற்பொழுது அச்சட்டம் இல்லை ஆனால் வீதி நாடகங்களை எளிதாக நிகழ்த்த முடிவதுமில்லை. தற்பொழுது பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லையே தவிர்த்து அனுமதிபெற்றாக வேண்டும். அனுமதி என்பது பாதுகாப்பிற்கான அல்லது பொதுமக்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடாத முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காகத்தான். அதற்கான அனுமதி நிச்சயம் பெற வேண்டும். ஆனால் தற்போதைய சூழல் அதனோடு நின்றுவிடுவதில்லை. பிரதி சார்ந்து விளக்கங்களைத் தரவேண்டியதுள்ளது. எவ்விதமான சமூக விரோதப் பொருண்மையோ நோக்கமோ இல்லையென்றாலும் பொதுச்சமூகம் தனக்கு எதிரானதாகக் கருதும் வாய்ப்பு அதிகமுண்டு. பல்வேறு அமைப்புகளின் அரசியல் ஆதாயம் கருதிய புரிந்துகொள்ளல் பிரதியைத் தவறாகப் பிரச்சாரம் செய்யவும் இடையீடு செய்யவும் வாய்ப்பாக மாறிவிட்டிருக்கிறது. வீதிக்கலைச்செயல்பாடுகளை முன்னெடுப்பது அடையாள மீட்டெடுப்பு அரசியல் மிக்க இக்காலச் சூழலில் சிக்கல் நிறைந்ததாக இருக்கிறது.

வீதி நாடகங்களை நிகழ்த்துவதில் இருக்கிற மற்றொரு சிக்கல் காட்சியூடக மயமாக்கல். வீடுகளுக்குள் நடித்து தொலைபேசிவழி பதிவு செய்து சினிமா பின்னணி இசை சேர்த்து குறுங் காட்சித் தொகுப்புகளாக வெளியிடுகிற ஆர்வம் நேரடி நிகழ்த்துதலில் இல்லை. நாடகப்பயிற்சிக்கானப் பொறுமையும் சமகால இளைஞர்களிடம் இல்லை. இப்போக்கு சினிமா எனும் கலையை மட்டும் சார்ந்ததாகப் பண்பாட்டை மாற்றும்.

**முடிவுரை**

கலை கலைக்காக , கலை மக்களுக்காக என்ற விவாதம் பல்லாண்டு காலமாக நிலவிவருகிறது. வீதி நாடகங்கள் முதல் பிரிவைச் சார்ந்தவை.ஆனால் அவை கலைத்தன்மையுடன் அழகியல்மிக்கவை. உடல்மொழியைக் கொண்டு அனைத்துப் பொருட்களாகவும் மாறி/மாற்றி நடித்தல் என்பது கலையாவதன் மிகு சாத்தியம்தானே. மேலும் இவ்வகை நாடகங்கள் உரிமை மீட்பிற்கானவையாக இருக்கின்றன. அடிமட்டத்தில் இருந்து மேலே எழும்புகிற அரசியல் நடவடிக்கைசார் எதிர்ப்புக் கலை வடிவம் என்று வீதி நாடகங்களைக் கருத முடியும்.

கூகிவா தியாங்கோ , அகஸ்டோ போவால் , பாதல் சர்கார் , சப்தர் ஹாஷ்மி போன்ற ஆளுமைகளால் மிகப்பெரும் புரட்சிகள் வீதி நாடகங்கள் மூலம் செய்யப்பட்டன. புரட்சி என்கிற சொல்லே எதிரானதாகக் கொள்ளப்படும் தருணத்தில் மக்கள் பிரச்சினைகளைப் பேசுகிற வீதிக்கலை வடிவங்களின் சாத்தியப்பாடு சிக்கல் நிறைந்ததுதான். மக்களை ஒன்றிணைக்க வீதி நாடகங்களும் வீதிக்கலை வடிவங்களும் அவசியம் தேவையாக இருக்கின்றன.

**துணை நூற்பட்டியல்**

சாமிநாதன்.எஸ் - மனசில் பதிஞ்ச காலடிச் சுவடுகள்
போதிவனம்
இராயப்பேட்டை
சென்னை

இரண்டாம் பதிப்பு அக்டோபர் 2023.

மங்கை.அ( மொ.பெ)- 1.அரங்கம்: அரசியல் – அழகியல் ( அரங்கக் கோட்பாடுகள் )
மாற்று
அரும்பாக்கம்
சென்னை – 6.
திசம்பர் 2010.
2.அடையாள மீட்பு( காலனிய ஓர்மை அகற்றல்)
எதிர் வேளியீடு
பொள்ளாச்சி
2021.

பிரளயன் - இலக்கம்4. பிச்சுப்பிள்ளைத் தெருவிலிருந்து
(உரையாடல்: ஆதவன் தீட்சண்யா, கி.பார்த்திபராஜா, ராஜாரவிவர்மா)
வாசல்
வசந்தா நகர்
மதுரை – 3.
திசம்பர் 2006.